வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 107 of 2019

வழக்கு சாட்சி - PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அருண்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | தங்ககொடி | வயது | : | |
| கிராமம் | : | சேடப்பாளையம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 23.03.2026.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கம்பெனியில் வேன் டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 16.09.2019 ஆம் தேதி மதியம் 1 -1.30 மணியளவில் சபைர் பனியம் கம்பெனிக்கு முன்பாக கூட்டமாக இருந்தது நான் கம்பெனியில் இருந்தது சாப்பிடுவதற்காக வெளியில் வந்தேன் அப்போது விசாரித்து மாதிரி வரைப்படம் வரைந்தார்கள் அதற்கு சாட்சியாக நானும் சுகேந்திரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.த.சா.ஆ. 2** ஆகும்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

நான் கையொப்பம் செய்த தாளில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கம்பெனியில் இருந்து சாப்பிட வெளியில் வந்தபோது எனக்கு முன்பாகவே பத்து பேர் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். இந்த இடத்தில் தான் விபத்து நடந்தது

என்று போலீசாருக்கு யாரும் அடையாளம் காண்பித்தார்கள் என்றால் அங்கிருந்தவர்கள் காண்பித்தார்கள். நான் சொன்ன விவரம் தவறு என்றாலும் நான் கம்பெனியில் இருந்து வெளியில் வந்தபோது போலீசார் மற்றும் பொதுமக்கள் இருந்ததால் சம்பவ இடத்தை நான் அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை . காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.23 17:31:11 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.